முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.06.2021, சனிக்கிழமை

1. ஞானமாம் சன்மார்க்க நெறியை
நம்பிக்கையூட்டி மக்களிடை அருள
ஞானமாக வந்த தவசியே
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ விடைதிங்கள்
வரங்களென இருபானீர்திகதி காரிவாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 22ம் நாள், 05.06.2021, சனிக்கிழமை)
வழங்குவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை மூர்த்தி நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற ஞானவான்களை
வணங்கினாலே உலக மக்களிடை
4. மக்களிடை நல்சிந்தை பெருகும்
மனபக்குவம் மனித நேயம்வளரும்
ஆக்கமான செயல்களாக மாறும்
ஆன்மீக ஞானவழி தெளிவு கூடி
5. கூடியே தரும தயவின்வழி
குறைவிலா நடத்தை பெருகும்
ஓடிவிடும் அகந்தை மமதைகள்
உலகமே தனக்கெனும் பேராசைஅவலம்
6. அவலம் அனைத்தும் விலகி
ஆக்கினை மும்மலக்குற்றங்களும்
புவனம் விட்டு அகன்றோடி
புண்ணியன் அரங்கன் சேவைவழி
7. சேவைவழி மக்கள் தொடர
சீடர்களாகி ஞானவான்களெனும்
அவனியில் புதுஅடையாளம் பெருகி
ஆபத்தில்லா உலகம் ஆகும்
8. ஆகுமே அரங்கஞானி விரும்பும்
ஆறுமுகனார் ஆசி கொண்ட
மிகையான ஞானவான்கள் நிறைந்த
மேலான நல்லுலகம் ஆகும்
9. ஆகவே அகிலம் சிறப்புற
ஆபத்தான நச்சுக்கிருமி அல்லல்
மிகாமல் கட்டுக்குள் வந்து
மண்ணுலகம் பாதுகாப்பை பெற

**10.** பெறவே சைவ நெறியோடு
பேதமிலா மனித வாழ்வு
அறத்தின் பலமான சட்டமாக
ஆளுமை ஞான ஆட்சியாகிட

**11.** ஆகிட துன்பங்கள் ஓடும்
ஆபத்தின்றி உலகம் பாதுகாப்புறும்
மகிழவே மக்கள் வாழ்வில் அமைதி
மாற்றமும் நல்ல தேற்றமும் ஆகும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–